தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 3, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2027

1996, பிப்ரவரி 15, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், பேரவை காலை 10.00 மணியளவில் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும் ".

தன்னுயிர் தனக்கு மட்டுமே என்ற தன்னலச் செறுக்கு நீங்கி வாழ்ந்து மறைந்தோரை, மண்ணுலகில் வாழும் அனைவரும் அவர்தம் பெருமைகளை உணர்ந்து, போற்றித் தொழுவர்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் எம்.கே. இராஜமாணிக்கம் அவர்கள் 11-12-1995 அன்றும், செ.ஜெ. இராமசாமி அவர்கள் 25-12-1995 அன்றும், என்.வி. குருசாமி அவர்கள் 6-02-1996 அன்றும், எஸ். திருமலைசாமி கவுண்டர் அவர்கள் 8-02-1996 அன்றும் மறைவுற்றது குறித்து, இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம்.கே. இராஜமாணிக்கம் அவர்கள், 1980-ஆம் ஆண்டு முதல் 1984-ஆம் ஆண்டு வரை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

திரு. செ.ஜே. இராமசாமி அவர்கள், 1962–ஆம் ஆண்டு முதல் 1967–ஆம் ஆண்டு வரை, மற்றும் 1967–ஆம் ஆண்டு முதல் 1971–ஆம் ஆண்டு வரை, வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணம் தொகுயிலிருந்தும், மற்றும் 1977–ஆம் ஆண்டு முதல் 1980–ஆம் ஆண்டு வரை சோளிங்கர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகச்சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. என்.வி. குருசாமி அவர்கள், 1971–ஆம் ஆண்டு முதல் 1976–ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எஸ். திருமலைசாமி கவுண்டர் அவர்கள், 1985–ஆம் ஆண்டு முதல் 1988–ஆம் ஆண்டு வரை, கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவு குறித்து, அவர்களை இழந்துவிட்ட அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய அப்பெரியோர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்).

2. இரங்கல் தீர்மானம்

ஆந்திர மாநில முதல்வர் திரு. என்.டி. ராமாராவ் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

“ஆந்திர மாநிலத்தின் முன்னாள் முதல் அமைச்சர் திரு. என்.டி. ராமாராவ் அவர்கள், 18–1–1996 அன்று அகால மறைவுற்றது குறித்து, இப்பேரவை மிகுந்த துயருறுகிறது.